இரண்டதம் தவணைப் பரீட்சை - 2025

தமிழ் இலக்கிய நயம்

தரம் - 10

விடைகள்

01. i. அ. அழகிய குவளை மலர்போன்ற மையிடப்பட்ட கண்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு அந்தக் கண்கள் மையிடப்பட்ட குவளை மலர்போல் என்ற உவமை அணி ஊடாக விளக்கப்பட்டுள்ளது.

ஆ. தலைவி சமைத்த உணவை கணவன் இனிமையாக இருக்கின்றது என்று கூறியதன் காரணமாக.

ii. அ. திருக்குறள்

ஆ. போர்க்களத்தில் பகைவர்கள் அஞ்சும் வீரனை மென்மையான காதல் தோற்கடிக்கின்றது.

iii. அ. கன்றுக் குட்டியை பால் குடிக்கவிடாமல் பட்டினிபோடுதல்

ஆ. கன்றுக்குட்டி இறந்துபோதல்

iv. அ இலக்குவனனது கோபமான வருகையைக்கண்டு குரங்குகள் எல்லம் அச்சம் கொண்டு கிட்கிந்தை மலையைவிட்டு நீங்கின.

ஆ. உவமையணி கையாளப்பட்டுள்ளது.

v. அ. செல்வந்தர்களிடமும் குறிப்பிட்ட சிலரிடமும் ஓலைச்சுவடிகள் முடங்கிக்கிடந்தன.

ஆ. ஓலைச்சுவடிகள் அச்சு இயந்திரத்தின் வருகையால் நூல்களாகப் பதிப்பிக்கப்பட்டன. பதிப்பிக்கப்பட்ட நூல்க்ள் பல்கிப்பெருகி அறிவுத்தாகம் நிறைந்தவர்களைச் சென்றடைந்தன.

02. 1. கன்னங்கரிய பெரு விளிகள் இரண்டுமே ஒளியிழந்து வந்தன.. அது துள்ளவும் முடியவில்லை, குதிக்கவும் முடியவில்லை. தளதளவென்ற சதைப்பிடிப்போடு இருக்கவேண்டிய மேனியில் எழும்புக்கூடு புரப்படத் தொடங்கியது.

ii. கன்றுக்குட்டிக்கு கழுத்துச் சங்கிலியோடு வாய்ப்பூட்டான கூடையும் கிடைத்தது, நினைத்த நேரத்தில் பால் குடிக்கமுடியவில்லை, பால்கறக்கும் நேரத்தில் மட்டும் குட்டியை அவிழ்த்துவிட்டு பால் சுரந்து வாய்க்கு வரும் நேரத்தில் அதை இழுத்துக் கட்டுதல்

iii. பசு கன்றுக்குட்டியையும் குமரனையும் தன் குழந்தைபோல் பார்த்தல், குமரனையும் கன்றுக்குட்டியையும் நாக்கால் மாறி மாறித் தடவிக்கொடுத்தல், கன்றுக்குட்டியின் தோற்றத்தைக் கண்டு தாய்ப்பசுவுக்கு வேதனை தாங்க முடியாமை.

iv. கன்னங்கரிய பெருவிளிகள் இரண்டும் ஒளி இழந்து வந்தன, அதனால் துள்ளவும் முடியவில்லை, குதிக்கவும் முடியவில்லை, மடியில் ஒரு சொட்டுப்பால் மீதமிருக்காது.

v. பசுவிடம் பால்கரந்துமுடிந்துவிட்டு கன்றுக்குட்டியை அவிழ்த்துவிடும்போது மடியில் ஒரு சொட்டுப் பால்கூட மீதமிருக்காது. இதனால் கன்றுக்குட்டி அவலப்படுவதைக் கண்டு வேதனை தாங்கமுடியாது இருப்பதனால் சுவரில் தன் கொம்புகளை மோதுதல்.